بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 05/06/2026 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**மாநபி (ஸல்) அவர்களின் ஊழியராக ஹஸ்ரத் அக்தஸ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பணிவு மற்றும் தன்னடக்கம் குறித்த நிகழ்வுகளும் அன்னார் தம் ஜமாஅத்துக்குப் பணிவையும், தன்னடக்கத்தையும் மேற்கொள்ளுமாறு வழங்கிய அறிவுரையும்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۝ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ۝ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ۝

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ۝ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ۝

கடந்த குத்பாவில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பணிவு மற்றும் தன்னடக்கம் குறித்த நிகழ்வுகளை அல்லது அறிவுரைகளை எடுத்துக் கூறியிருந்தேன். இன்றும் இது தொடர்பாகவே சில நிகழ்வுகளை எடுத்துரைப்பேன்.

ஹஸ்ரத் ஷேக் முஹம்மத் இஸ்மாயீல் சாஹிப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் நல்லொழுக்கத்தின் நிலை எவ்வாறு இருந்தது என்றால், காதியானின் எந்த மக்கள் எந்நேரமும் அன்னாருக்கு எதிராகப் பகைமை பாராட்டுவதில் மூழ்கியிருந்தார்களோ, ஒரு சிறுவாய்ப்பையும் கைநழுவ விடமாட்டார்களோ, அவர்களும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கதவை எப்பொழுது தட்டினாலும், அன்னார் வெறுங்காலோடு வெளியே வருவார்கள். சலாமுக்கு பதில் அளித்துவிட்டு, நீங்கள் நன்றாக இருக்கிறீர்களா என்று கேட்பார்கள். அவருடைய வீட்டு மக்கள் பற்றி விசாரிப்பார்கள். பிறகு, எதற்காக வந்தீர்கள் என்று கேட்பார்கள். பிறகு, அவர் என்ன தேவையை முன்வைத்தாலும், எந்த எவ்வளவு தேவைப்படுகிறது என்று கேட்பார்கள். மேலும், அவருடைய தேவைக்கு அதிகமாகவே கொண்டு வந்து கொடுப்பார்கள்.

ஹஸ்ரத் மவ்லவி ஷேர் அலீ சாஹிப் (ரலி) அவர்கள் ஒருமுறை கூறினார்கள்: மீரான் பக்ஷ் சவ்தாயீ என்பவர் புத்தி பேதலித்த மனிதர் ஆவார். அவர் ஒருமுறை, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பெரிய பள்ளிவாசலிலிருந்து வரும்போது, மிகவும் கண்ணியக்குறைச்சலாக அழைத்து, காசு கேட்டார். அன்னார் தமது கைகுட்டையிலிருந்து 4 அல்லது 8 அணா எடுத்து அவருக்கு வழங்கி விட்டார்கள். அவர் மகிழ்ச்சியடைந்து சென்று விட்டார்.

மாஸ்டர் நஸீர் ஹுஸைன் சாஹிப் அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் என் தந்தையாருடன் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம்

காதியானுக்கு வந்த பொழுதெல்லாம், ஈஸா களிம்பு மருத்துவர் வந்திருக்கிறார் என்று ஹுஸூர் (அலை) அவர்களுக்குத் தகவல் கொடுக்கப்பட்ட பொழுதெல்லாம், தகவல் கிடைத்தவுடனேயே அன்னார் உடனடியாக வருகை தருவதையும், தாமே ஏதாவது உண்ணக் கொண்டு வந்து கொடுப்பதையும் நான் எப்பொழுதும் பார்த்திருக்கிறேன்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எந்த அளவுக்கு எளிமையுடன் விருந்தினர்களை சந்தித்து வந்தார்கள் என்றால், நான் சில நேரத்தில் அன்னாரை எத்தகைய நிலையில் கண்டிருக்கிறேன் என்றால், அன்னாரது கைகளில் எழுதுகோல் இருக்கும். சிலவேளை எங்களை சந்திக்க வெறுங்காலிலேயே வருகை தருவார்கள். அதாவது, எந்த நிலையில் உள்ளே அமர்ந்திருக்கிறார்களோ அப்படியே வந்து விடுவார்கள்.

ஹஸ்ரத் முஃப்தீ முஹம்மத் சாதிக் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஒருமுறை நான் லாஹோரிலிருந்து காதியானுக்கு வந்திருந்தேன். ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்கள் என்னை முபாரக் பள்ளிவாசலில் உட்கார வைத்தார்கள். “அமருங்கள், நான் உணவு கொண்டு வருகிறேன்” என்று கூறினார்கள். பிறகு, கொஞ்ச நேரம் கழித்து தாமே ஒரு பெரிய வட்டில் உணவை எடுத்துக் கொண்டு வருகை வந்தார்கள். பிறகு, “உண்ணுங்கள், நான் தண்ணீர் கொண்டு வருகிறேன்” என்று கூறினார்கள். முஃப்தீ சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: இதைக் கண்டு கட்டுப்பாடின்றி என் கண்களிலிருந்து கண்ணீர் வந்தது.

ஹஸ்ரத் முன்ஷீ ஸஃபர் அஹ்மத் சாஹிப் கபூர்தல்வீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒருபோதும் கதவைத் திறந்து வைத்துக் கொண்டு அமர மாட்டார்கள். அதாவது, கதவை அடைத்து வைத்து விட்டு அமர்வார்கள். அவர்கள் கூறுகிறார்கள்: நான் ஹுஸூர் (அலை) அவர்களுக்கு அருகில் அமர்ந்திருந்தேன். கொஞ்ச நேர கால இடைவெளிக்குப் பிறகு ஹஸ்ரத் சாஹிப்ஸாதா மியான் மஹ்மூத் அஹ்மத் சாஹிப் அவர்கள் ‘தந்தையே! தாழ்ப்பாளைத் திறங்கள்’ என்று சொல்வார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்கள் உடனடியாக எழுந்து திறந்து விடுவார்கள்.

ஒருமுறை நான் ஹுஸூர் (அலை) அவர்கள் முன்னிலையில் சென்றேன். அப்பொழுது அன்னார் விரிப்பில் அமர்ந்திருந்தார்கள். என்னைப் பார்த்ததும் அன்னார் கட்டிலைத் தூக்கி உள்ளே எடுத்துச் சென்றார்கள். ‘நான் தூக்குகிறேன்’ என்று நான் சொன்னேன். அதற்கு ஹுஸூர் (அலை) அவர்கள், “எடை அதிகம். உங்களால் தூக்க முடியாது” என்றார்கள். உள்ளே கட்டிலை விரித்து விட்டு, “நீங்கள் இதில் அமர்ந்து கொள்ளுங்கள், எனக்குக் கீழே தான் வசதி, நான் கீழே உட்கார்கிறேன்” என்று கூறினார்கள். எனக்குத் தாகம் எடுத்ததும், “நான் உள்ளே இருந்து குவளையைக் கொண்டு வருகிறேன்” என்று கூறினார்கள். பிறகு, உள்ளே இருந்து இரண்டு சர்பத் பாட்டில்கள் கொண்டு வந்தார்கள். அதை யாரோ மணிப்பூரிலிருந்து அனுப்பி வைத்திருந்தார்கள்.

அன்னார், “இந்த சர்பத் பாட்டில்களை அப்படியே வைத்திருந்து பல நாள்கள் ஆகி விட்டன. ஏனென்றால், முதலில் யாராவது ஒரு தோழருக்கு அருந்தக் கொடுத்து விட்டு, பிறகு நாம் அருந்தலாம் என்று எண்ணியிருந்தோம்” என்று கூறினார்கள். எனக்கு ஒரு குவளை கலந்து தந்தார்கள். நான், ‘முதலில் ஹுஸூர் அவர்கள் இதிலிருந்து சிறிது அருந்துங்கள்’ என்று கூறினேன். ஹுஸூர் (அலை) அவர்கள் ஒரு மடக்கு அருந்தினார்கள். நான் சர்பத்தின் சுவையைப் புகழ்ந்தேன். அன்னார், “ஒரு பாட்டிலை நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள். இன்னொரு பாட்டிலை வெளியே விருந்தினர்களுக்கு அருந்தக் கொடுங்கள்” என்று கூறினார்கள்.

ஒருமுறை லாஹோரிலிருந்து, டாக்டர் அல்லாமா இக்பால் மற்றும் சர் ஷிஹாபுத்தீன் முதலியோர் உட்பட, கண்ணியத்திற்குரியவர்கள் ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களை சந்திப்பதற்காக வந்தார்கள். அந்த சந்திப்பைப் பற்றி பாபூ குலாம் முஹம்மத் சாஹிப் அவர்கள் அறிவிக்கிறார்கள்: இரவு, உணவு உண்ட பிறகு, கட்டில்கள் பகிரப்பட்டபோது, நான் வலுவான, பெரிய கட்டிலை எடுத்துக் கொண்டேன். ஆனால், சௌத்ரீ ஷிஹாபுத்தீன் சாஹிப் அவர்கள் எனது கட்டிலை ஆக்கிரமித்துக் கொண்டார்கள். ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்கள் வருகை தந்தார்கள். “உங்களுக்கு எந்தத் துன்பமும் இல்லையே?” என ஒவ்வொருவரிடமும் விசாரித்தார்கள். ஒவ்வொருவரும், ‘ஹஸ்ரத், எனக்கு எந்தத் துன்பமும் இல்லை’ என்று கூறினார். என்னிடம் வந்த போது, நான் கவலையாக நின்று கொண்டிருந்தேன். ஏனெனில், எனது கட்டிலை ஷிஹாபுத்தீன் சாஹிப் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தார். அன்னார் என்னைப் பார்த்து, “இருங்கள், நான் உங்களுக்காக உள்ளேயிருந்து கட்டில் கொண்டு வருகிறேன்” என்று கூறினார்கள்.

வெகு நேரம் ஆகியும், யாரும் வராததால், நான் உள்ளே எட்டிப் பார்த்தேன். அப்பொழுது ஒரு மனிதர் வேக வேமாகக் கட்டில் பின்னிக் கொண்டிருப்பதையும், ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்கள் அவரது தலைக்கு மேல் விளக்கேந்தி அமர்ந்திருப்பதையும் கண்டேன். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த நிலையைக் கண்டு எனக்கு மிகவும் வெட்கம் வந்து விட்டது. நான், “ஹுஸூர், விளக்கை என்னிடம் தாருங்கள்” என்று பணிவுடன் கேட்டுக் கொண்டேன். அதற்கு ஹுஸூர் (அலை) அவர்கள், “இப்பொழுது ஒரு சுற்று தான் எஞ்சியுள்ளது” என்று கூறினார்கள். ஹுஸூர் (அலை) அவர்களின் இந்த நல்லொழுக்கத்தைப் பார்த்து என் மீது எந்த அளவுக்குத் தாக்கம் ஏற்பட்டது என்றால், எனக்குக் கண்ணீர் வந்து விட்டது.

**ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் ஸியால்கோட்டீ (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:** அநேகமாக 1896 இல் நடந்த நிகழ்வு. அது ஒரு ஜூன் மாதம். வீட்டின் உட்புறம் புதிதாகக் கட்டப்பட்டிருந்தது. மதிய வேளையில் அங்கு போடப்பட்டிருந்த கட்டிலில் நான் படுத்துக் கொண்டேன். ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்கள் உலாவிக் கொண்டிருந்தார்கள். நான் கண் விழித்த போது, ஹுஸூர் (அலை) அவர்கள் கட்டிலுக்குக் கீழே படுத்திருப்பதைக் கண்டேன். நான்

கண்ணியம் நிமித்தமாக எழுந்து அமர்ந்துவிட்டேன். அன்னார், "ஏன் எழுந்தீர்கள்?" என்று கேட்டார்கள். அதற்கு நான், 'தாங்கள் கீழே படுத்திருக்கும் போது, நான் எப்படி மேலே தூங்கிக் கொண்டிருக்க முடியும்?' என்று கேட்டேன். அதற்கு அன்னார் புன்னகைத்தவாறு, "நானோ உங்களைக் காவல் காத்துக் கொண்டிருக்கிறேன். சிறுவர்கள் கூச்சலிடுகிறார்கள். உங்களுடைய உறக்கத்தில் இடையூறு ஏற்படாமல் இருக்க அவர்களைத் தடுத்துக் கொண்டிருந்தேன்" என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் முன்ஷீ இமாமுத்தீன் சாஹிப் (ரலி) அவர்கள் எடுத்துரைக்கிறார்கள்:** 1894 ஆம் ஆண்டு நான் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருளுக்குரிய கைகளில் பைஅத் செய்தேன். மாலை வேளை தொழுகையில் முன்ஷீ அப்துல் அஸீஸ் சாஹிப் அவர்கள் என்னுடன் இருந்தார்கள். தொழுகைக்குப் பிறகு முன்ஷீ சாஹிப் அவர்கள் என் பக்கம் சைகை செய்தவாறு, ஹஸ்ரத் அக்தஸ் (அலை) அவர்களிடம், 'ஹுஸூர், இவர்களிடம் பைஅத் வாங்கிக் கொள்ளுங்கள்' என்று கேட்டுக்கொண்டார்கள். அதற்கு ஹுஸூர் (அலை) அவர்கள், "உள்ளே வாருங்கள்" என்றார்கள். நான் தனியாக, உள்ளே பைத்துல் ஃபிக்ருக்குள் சென்று விட்டேன். அப்பொழுது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கட்டிலின் தலைமாட்டுப் பக்கத்தில் என்னை அமர வைத்தார்கள். கால்மாட்டுப் பக்கத்தில் தாம் அமர்ந்து கொண்டார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** எனது நிலை என்னவென்றால், நான் தொழுகையில் மூழ்கி இருக்கும் பொழுது யாருக்காவது வேதனை ஏற்பட்டு, அவருடைய குரல் எனது காதுகளில் விழுந்தால், தொழுகையை முறித்தேனும் அவருக்கு உதவ இயலும் எனின், அவ்வாறு உதவுவதையும், இயன்ற அளவு அவரோடு அனுதாபம் காட்டுவதையுமே விரும்புகிறேன். ஒரு சகோதரர் துன்பத்திலும் துயரத்திலும் இருக்கும்போது, அவருக்குத் துணை நிற்காமல் இருப்பது நல்லொழுக்கத்திற்கு மாறானதாகும். உங்களால் அவருக்காக எதுவுமே செய்ய முடியவில்லை என்றாலும், குறைந்தபட்சம் துஆவாவது செய்யுங்கள். நம்மவர்கள் ஒரு புறமிருக்கட்டும்; அந்நியர்கள் மற்றும் இந்துக்களோடும் மிகவும் மேலான நல்லொழுக்கத்தின் முன்மாதிரியை வெளிப்படுத்துங்கள். மேலும், அவர்களோடு அனுதாபத்துடன் நடந்து கொள்ளுங்கள். எனக்கென்ன! என்ற மனப்பாண்மை ஒருபோதும் இருக்கக்கூடாது.

**ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹுஸூர் (அலை) அவர்கள் யாரையாவது சந்திக்கும் போது, புன்சிரித்தவாறு சந்திப்பார்கள். அதனால் அவரது எல்லா அலுப்பும் நீங்கி விடும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உவகையைக் கண்டு, அன்னாரது அவைக்குச் சென்று உள்ளத்தின் துயரங்கள் அனைத்தும் துடைக்கப்படுவதை ஒவ்வோர் அஹ்மதியும் உணர்ந்தார்.

சிறியவர்களிலும் சிறியவரின் பேச்சையும் மிக கவனமாக கேட்பதும், மிகுந்த அன்போடு பதிலளிப்பதும் அன்னாருடைய வழக்கம் ஆகும். ஹஸ்ரத் சாஹிப் அவர்கள், தன் மீதே மிகுந்த அன்பு கொண்டுள்ளார்கள் என ஒவ்வொரு மனிதரும் தத்தமது இடத்தில் கருதி வந்தார். அவையில் சிலவேளை அவைக்குரிய ஒழுக்கங்களை அறியாத மக்களும் வெகு நேரம் தமது விஷயங்களைக் கூறிக் கொண்டே இருப்பார்கள். ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்கள் மௌனமாகக் கேட்டுக் கொண்டே இருப்பார்கள். ஒருபோதும் எவரிடமும் போதும் நிறுத்துங்கள் என்று கூற மாட்டார்கள். ஒருவர் ஹுஸூர் (அலை) அவர்களிடம் வந்தார். அவர் கீழே தலையைக் குனிந்து அன்னாரது கால் மீது வைக்கப் பார்த்தார். ஹஸ்ரத் சாஹிப் (அலை) அவர்கள் கையால் அவரது தலையை விலக்கி விட்டு, “இந்த வழிமுறை ஆகுமானதல்ல. அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூற வேண்டும். மேலும், கைகுலுக்க வேண்டும்” என்று கூறினார்கள்.

ஃபக்கீர்மார்களையும், தர்காவின் தலைமைப் பொறுப்பாளர்களையும் போற்றி, அவர்களோடு இருந்து வந்த ஒரு நபர் நமது பள்ளிவாசலுக்கு வந்தார். மக்கள் சுதந்திரமாக உரையாடிக் கொண்டிருப்பதைக் கண்டு வியந்து போனார். அவர் ஹுஸூர் (அலை) அவர்களிடம், ‘உங்களுடைய பள்ளிவாசலில் ஒழுக்கம் இல்லையே, மக்கள் அச்சம், தயக்கம் இல்லாமல் உங்களுடன் உரையாடுகிறார்களே’ என்று கூறினார். அதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், “காட்டு விலங்கைப் பார்த்து அஞ்சுவது போன்று மக்கள் என்னைப் பார்த்து அஞ்சும் வகையில், நான் கடும் சினங்கொண்ட, அச்சுறுத்தும் நபராக ஆகி இருப்பது எனது கொள்கை அல்ல. மேலும், நான் சிலையாக ஆவதைக் கடுமையாக வெறுக்கிறேன். நானோ சிலை வணக்கத்தை நீக்குவதற்காகவே வந்துள்ளேன்; நானே சிலையாகி, மக்கள் என்னை வணங்குவதற்காக அல்ல. நான் அணுவளவும் பிறரை விட எனக்கு முன்னுரிமை வழங்குவதில்லை என்பதை அல்லாஹ் நன்கறிவான். என்னைப் பொறுத்தவரை, ஆணவம் கொள்பவனை விடப் பெரிய சிலை வணங்கி மற்றும் அசுத்தமானவன் வேறு எவனும் இல்லை. ஆணவம் கொள்பவன் எந்த இறைவனையும் வணங்குவதில்லை. மாறாக, அவன் தன்னையே வணங்குகிறான்.

**ஹஸ்ரத் ஷேக் அப்துல் காதிர் சாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:-** ஹஸ்ரத் மிர்ஸா சுல்தான் அஹ்மத் சாஹிப் அவர்கள் இவ்வாறு கூறி வந்தார்கள்: தந்தையார் தம் வாழ்நாளை ஒரு முகலாயரைப் போன்று கழிக்கவில்லை. மாறாக, ஏழையைப் போன்று கழித்தார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** இறையச்சமுடையவர்கள் தங்கள் வாழ்க்கையை வறுமையிலும் எளிமையிலும் கழிக்க வேண்டும் என்பது நிபந்தனையாகும். இது இறையச்சத்தின் ஒரு கிளையாகும். இதன் மூலம் நாம் முறையற்ற சீற்றத்தை எதிர்த்து போராட வேண்டும். பெரும் பெரும் இறைஞானம் பெற்றவர்களுக்கும், உண்மையாளர்களுக்கும் இறுதிக் கடின இலக்கு சீற்றத்திலிருந்து தவிர்ந்து

கொள்வதுதான். அகந்தையும் தற்பெருமையும் சீற்றத்திலிருந்து பிறக்கின்றன. இவ்வாறே சிலவேளை சீற்றமும் அகந்தை மற்றும் தற்பெருமையின் விளைவேயாகும். ஏனெனில், மனிதன் பிறரை விடத் தன்னை உயர்வாகக் கொள்ளும்போதுதான் சீற்றம் ஏற்படுகிறது.

என் ஜமாஅத்தினர் ஒருவர் மற்றவரை சிறியவராகவோ பெரியவராகவோ கருதுவதையும், அல்லது ஒருவர் மற்றவர் மீது செருக்குக் கொள்வதையும், அல்லது அற்பமாகப் பார்ப்பதையும் நான் விரும்புவதில்லை. பெரியவர் யார், சிறியவர் யார் என்பதை இறைவன் அறிவான். சில மனிதர்கள் பெரியவர்களை சந்திக்கையில் மிகவும் கண்ணியமாக நடந்து கொள்கிறார்கள். ஆனால், வறியோரின் பேச்சைப் பணிவுடன் கேட்பவரே பெரியவர் ஆவார். அவரது உள்ளத்தை மகிழ்விக்க வேண்டும். அவருடைய பேச்சுக்கு மதிப்பளிக்க வேண்டும். துன்பம் தரும் வகையிலான எந்த ஒரு வெறுப்பூட்டும் சொல்லையும் நாவில் கொண்டு வரக்கூடாது.

இறைவன் கூறுகிறான்:

وَلَا تَنَابَزُوْا بِالْاَلْقَابِ ؕ بِئْسَ الِاسْمُ الْفُسُوْقُ بَعْدَ الْاِيْمَانِ ۚ وَمَنْ لَّمْ يَتُبْ فَاُولٰٓئِكَ هُمُ الظّٰلِمُوْنَ ﴿۱۲﴾

அன்னார் கூறுகிறார்கள்: நீங்கள் ஒருவரையொருவர் வெறுப்பூட்டும் பட்டப்பெயர் சூட்டி அழைக்காதீர்கள். இந்தச் செயல் நெறிதவறிய தீயோரின் செயலாகும். எவர் யாரையாவது வெறுப்பூட்டுகிறாரோ, அவரும் அவ்வாறே சிக்கித் தவிக்கும் வரை மரணிக்க மாட்டார். உங்கள் சகோதரர்களை இழிவாகக் கருதாதீர்கள். அனைவரும் ஒரே நீருற்றிலிருந்து நீர் அருந்தும்போது, அதிக நீர் அருந்துவது யாருடைய நற்பேற்றில் உள்ளது என்பதை யார் அறிவார்.

அல்லாஹ் நமக்கு உண்மையான முறையில் பணிவு மற்றும் தன்னடக்கத்தை உருவாக்கிக் கொள்வதற்குத் தவ்ஃபீக் வழங்குவானாக! ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பைஅத்தில் வந்து நாம் உண்மையான இஸ்லாத்தின் போதனைகள்படி அமல் செய்பவர்களாக இருப்போமாக! அதற்கான உரிமையை நிறைவேற்றக்கூடியவர்களாக இருப்போமாக!

اَلْحَمْدُ لِلّٰهِ ! اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ

اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ،

عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ

تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: முரப்பி அத்தாவுல் முஃக்னீ)**